தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

## ஆணை நாள். 06.07.2026

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 15872/D/2025**

திரு க.மாரீஸ்வரன் .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்,
நீர்வளத்துறை,
வைப்பாறு வடிநில பிரிவு,
விருதுநகர் மாவட்டம் - 626 002. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 05.08.2025 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 16.09.2025 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 27.10.2025 |

******

## ஆணை

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு க.மாரீஸ்வரன் ஆஜராகவில்லை. மனுதாரர் இவ்வாணையத்திற்கு 01.07.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக வேறொரு வழக்கிற்கு 01.07.2026 அன்று ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராகியதாகவும், மனுதாரர் மாற்று திறனாளி என்றும், மருத்துவ சிகிச்சையில் இருக்கும் காரணத்தினால் இவ்வழக்கின் விசாரணையை வேறொரு தேதிக்கு மாற்றி வைக்கும்படியும் ஆணையத்தைக் கோரியுள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு வ.கி.கார்த்திகேயன், உதவி செயற்பொறியாளர், நீர்வளத்துறை, வைப்பாறு வடிநில

பிரிவு, விருதுநகர் மாவட்டம் அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 05.08.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சிவகாசி சட்டமன்றத் தொகுதிக்குள் உள்ள தனியார் சொந்தமான கிணறு, குளங்கள் மற்றும் நீர் நிலைகள் எவை? அவற்றின் பெயர்கள் மற்றும் அவை அமைந்துள்ள சர்வே எண்கள் என்னென்ன? அதனுடன் அவற்றின் வீதி வரைபட நகல் தொடர்பான 10 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 16.09.2025 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 27.10.2025 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை 30.10.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 15872/D/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்,
நீர்வளத்துறை,
வைப்பாறு வடிநில பிரிவு,
விருதுநகர் மாவட்டம் - 626 002.

**<u>மனுதாரர்</u>**

திரு க.மாரீஸ்வரன்,
த/பெ. திரு செ.கந்தவேல்நாடார்,
க.எண்.327/D, பாண்டியன் நகர்,
6வது தெரு, அன்னை இந்திரா
காந்தி நகர்,
திருத்தங்கல் நகரம்,
விருதுநகர் மாவட்டம் - 626 130.

***Copy to: File***
***VP / PA***